கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2012/2013
(மார்ச்/ஏப்ரல் 2015)

**GYS 2123 பிராந்தியக் கற்கைகள்**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

01 JUN 2015

பகுதி – I இல் இருந்து இரு வினாவையும் பகுதி – II இல் இருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01.(அ) தென்னாசியாவின் தரைத்தோற்ற அமைப்பானது உலகில் உள்ள ஏனைய பிரதேசங்களில் காணப்படாத வகையில் சிறப்புத் தன்மை வாய்ந்ததாகக் காணப்படுவதற்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) தென்னாசியாவின் தரைத்தோற்ற வேறுபாடுகளைக் குறிப்பிட்டு அதில் யாதாயினும் ஒன்றினது பௌதீக ரீதியான முக்கியத்துவத்தினை விளக்குக.

(15 புள்ளிகள்)

02. (அ) தென்னாசிய நாடுகளின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் (5) ஐந்தினை பெயரிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் அமைவிடம் எவ்வகையில் இந் நாட்டின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) தென்னாசியாவில் காலநிலை ரீதியாக காணப்படும் பிரதேச ரீதியான வேறுபாடுகளுக்கு தரைத்தோற்ற அமைப்பில் காணப்படும் வேறுபாடுகளே காரணமாக அமைகின்றன என்ற கூற்றினை நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

03. (அ) உழவர் விவசாயம் என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) தென்னாசிய நாடுகளின் உழவர் விவசாயம் மன்னர்களின் ஆட்சிக்கு பின்னரான காலத்தில் எவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொண்டது என்பதனை குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(இ) உழவர் விவசாயத்துறையை விருத்தி செய்வதற்காக தென்னாசிய நாடுகளது அரசுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி – II

04. தென்னாசிய நாடுகளில் ஒன்றான இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களில் காணப்படும் பிரதேச ரீதியான வேறுபாடுகளுக்கு இந் நாட்டின் தரைத்தோற்ற உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய புவிச்சரிதவியல் நிகழ்வுகளே முக்கிய காரணமாக அமைகின்றது." என்ற கூற்றினை ஏற்றுக்கொள்வீரா? உமது கருத்தினை நியாயப்படுத்துக. (25 புள்ளிகள்)

05. குடித்தொகை அதிகரிப்பானது தென்னாசிய நாடுகளில் எவ்வாறான பிரச்சினைகளை உண்டு பண்ணியுள்ளது என்பது தொடர்பாக 300 சொற்களுக்கு மேற்படாத ஒரு புவியியல் கட்டுரை வரைக.

(25 புள்ளிகள்)

06. யாதாயினும் இரண்டினிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(1) நகராக்க வளர்ச்சினால் தென்னாசிய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள்.

(2) இலங்கையின் உழவர், விவசாயத்துறையின் விருத்தியில் மாகவலித் திட்டத்தின் பங்களிப்பு.

(3) ஜப்பானின் கைத்தொழில் வளர்ச்சி

(12 ½ x 2 புள்ளிகள்)